**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை .**
**முன்னிலை – திரு. து. சரவணன் பி.ஏ., பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,ஊத்தங்கரை
2026 – ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.110/2020**

**CNR NO:TNKI12-002740-2020**

அரசுக்காக:-
சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 909/2020 .... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1. பரதன்(23) த/பெ.அழகேசன் .... குற்றஞ்சாட்டப்பட்டவர்

இவ்வழக்கு 21.11.2020 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி.K.ஜெயந்தி அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G. வஜ்ரவேல் அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

**தீர்ப்புரை**

கடந்த 21.06.2020ம் தேதி இரவு 10.00 மணிக்கு அனுமன்தீர்த்தம் கிராமத்திற்கு உட்பட்ட அனுமன்தீர்த்தம் டு புங்கனை ரோட்டின் இடதுபுறமாக அமைந்துள்ள புதுப்பட்டி பஸ் நிழற்கூடம் அருகே மேற்கு திசையில் இருந்து கிழக்கு நோக்கி இவ்வழக்கின் சாட்சி வேடியப்பன் ஓட்டி வந்த டிராக்டரை தடுத்து வழிமறித்து நிறுத்தி வழக்கில் கண்ட எதிரி பரதன் என்பவர் சாட்சி வேடியப்பனை பார்த்து தேவடியா மகனே என்று

துர்பாஷையால் திட்டி வேடியப்பனின் வலது கண்ணத்தின் மீது கையால் அடித்து தன்னிச்சையாக சொற்ப காயத்தை ஏற்படுத்தி சாட்சி1 வேடியப்பனை பார்த்து என்னிடம் வைத்துக்கொண்டால் கொன்றுவிடுவேன் என்று உயிர் பயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரி மீது ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 341,294(b),323, 506(1) –ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி முன்னிலையானதும், எதிரிக்கு அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு நகல் வழங்கிய பின்பு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டு வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 341,294(b),323, 506(1) –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரி மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:–**</u>

5. கடந்த 21.06.2020ம் தேதி இரவு 10.00 மணிக்கு அனுமன்தீர்த்தம் கிராமத்திற்கு உட்பட்ட அனுமன்தீர்த்தம் டு புங்கனை ரோட்டின்

இடதுபுறமாக அமைந்துள்ள புதுப்பட்டி பஸ் நிழற்கூடம் அருகே மேற்கு திசையில் இருந்து கிழக்கு நோக்கி இவ்வழக்கின் சாட்சி வேடியப்பன் ஓட்டி வந்த டிராக்டரை தடுத்து வழிமறித்து நிறுத்தி வழக்கில் கண்ட எதிரி பரதன் என்பவர் சாட்சி வேடியப்பனை பார்த்து தேவடியா மகனே என்று துர்பாஷையால் திட்டியும் வேடியப்பனின் வலது கண்ணத்தின் மீது கையால் அடித்தும் தன்னிச்சையாக சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் சாட்சி வேடியப்பனை பார்த்து என்னிடம் வைத்துக்கொண்டால் கொன்றுவிடுவேன் என்று உயிர் பயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக பட்டியல் சாட்சி–11 திருமதி சாந்தி கடந்த 22.06.2020 ம் தேதி ஊத்தங்கரை சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக இருந்த திரு. சுந்தரவேல் என்பவர் நிலையம் அலுவலில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சாட்சி வேடியப்பன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்பு நிலையம் வந்து புகாரின் பேரில் நிலைய குற்ற எண் 909/2020 சட்டபிரிவு 341, 294(b),323, 506(1) இதச ஆக முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்து பின்னர் 22.06.2020 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அனுமந்தன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் சாட்சிகள் வேடியப்பன், வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணன், ராமுமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, பெரியதம்பி, சேகர், காமராஜ், அனுமந்தன், ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் 22.06.2020 ம் தேதி 17.30 மணிக்கு எதிரி பரதன் கைதுசெய்து மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் பின்னர்

வழக்கின் புலன் விசாரணையை முடித்து 23.06.2020 ம் தேதி எதிரிக்கு எதிராக சட்டபிரிவு 341, 294(b), 323, 506(1) இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அரசு தரப்பில் உள்ளது.

**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**

6. அரசுத்தரப்பில் நடந்த சம்பவம் பற்றியும், எதிரி தன்னை கெட்டவார்த்தையால் திட்டி அடித்தது பற்றியும் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சியாக அ.சா.1 வேடியப்பன் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும் சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.2 வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணன் என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 ராமமூர்த்தி என்பவர் சம்பவயிடத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 கிருஷ்ணமூர்த்தி என்பவர் சம்பவயிடத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 பெரியதம்பி என்பவர் சம்பவயிடத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் அ.சா.6 செண்பகவள்ளி கடந்த 22.06.2020 ம் தேதி 11.20 மணிக்கு ஊத்தங்கரை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக இருந்த திரு.சுந்தரவேல் என்பவர் நிலையம் அலுவலில் இருந்தபோது காவல் நிலையம் வந்து வேடியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப்பெற்று புகாரின் பேரில் நிலைய குற்ற எண் 909/2020 சட்டபிரிவு 341, 294(b), 323, 506(1) இதச ஆக வழக்கு பதிவு செய்து பின்னர் வழக்கு கோப்பினை

விசாரணைக்கு கொண்ட திருமதி சாந்தி 22.06.2020 தேதி 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அனுமந்தன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பின்னர் சாட்சிகள் வேடியப்பன், வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணன், ராமுமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, பெரியதம்பி, சேகர், காமராஜ், அனுமந்தன், ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் 22.06.2020 ம் தேதி 17.30 மணிக்கு எதிரி பரதன் கைதுசெய்து மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் அவர் மூலம் புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரியை கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினை:–</u>**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1) –ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>வாதுரைகள்:–</u>**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அலுவலக சாட்சி எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், அரசுத்தரப்பில் சம்பவ சாட்சி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளனர் என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரியின் மீதான குற்றச்செயல்கள் நிரூபிக்கப்படாததால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–</u>**

11. இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தபோது வழக்கின் சம்பவம் பற்றி கூறக்கூடிய சாட்சி அ.சா.1 வேடியப்பன் இந்த வழக்கை தீர்மானிக்கும் முக்கிய சாட்சியாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அ.சா.1 வேடியப்பன் சாட்சியத்தினை கண்ணுற்றபோது, அ.சா.1 தனது முதல் விசாரணைச் சாட்சியத்தில் தான் புதுப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரியை தெரியும் தன் அண்ணன் மகன் ஆவார் என்றும் தாங்களும் எதிரியும் தங்களுக்குள் பேசி சமாதானம் ஆகிவிட்டோம் என்றும் தற்போது தங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 சமாதான மனுவில் உள்ள கையொப்பம்

தன்னுடையதுதான் என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 வேடியப்பனை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 வேடியப்பனின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரியை தெரியும் என்றும் வழக்கின் புகார்தாரை தெரியும் என்றும் தன் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் தற்போது எதிரியும் புகார்தாரரும் அவர்களுக்குள் பேசி சமாதானமாகிவிட்டார்கள் என்றும் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சம்பவம் எதுவும் தான் பார்க்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.2 வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணனின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ராமமூர்த்தி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரியை தெரியும் என்றும் வழக்கின் புகார்தாரை தெரியும் என்றும்

இருவரும் தன் உறவினர்கள் என்றும் தற்போது எதிரியும் புகார்தாரரும் அவர்களுகுள் பேசி சமாதானமாகிவிட்டார்கள் என்றும் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சம்பவம் எதையும் தான் பார்க்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.3 ராமமூர்த்தியின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான சாட்சியான அ.சா.4 கிருஷ்ணமூர்த்தி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரியை தெரியும் என்றும் வழக்கின் புகார்தாரை தெரியும் என்றும் இருவரும் தன் உறவினர்கள் என்றும் தற்போது எதிரியும் புகார்தாரரும் அவர்களுக்குள் பேசி சமாதானமாகி விட்டார்கள் என்றும் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சம்பவம் எதுவும் தான் பார்க்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.4 கிருஷ்ணமூர்த்தி குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான சாட்சியான அ.சா.5 பெரியதம்பி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரி தெரியும் வழக்கின் புகார்தாரை தெரியும் என்றும் இருவரும் தன் உறவினர்கள் என்றும் தற்போது எதிரியும் புகார்தாரரும் அவர்களுக்குள் பேசி சமாதானமாகிவிட்டார்கள் என்றும் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சம்பவம் எதுவும் தான் பார்க்கவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.5 பெரியதம்பியின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. இவ்வழக்கில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும் அ.சா.6 திருமதி.செண்பகவள்ளி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 22.06.2020 ம் தேதி 11.20 மணிக்கு ஊத்தங்கரை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக இருந்த திரு.சுந்தரவேல் என்பவர் நிலையம் அலுலலில் இருந்தபோது காவல் நிலையம் வந்து வேடியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.3 புகார்மனுவின் பேரில் நிலைய குற்ற எண் 909/2020 சட்டபிரிவு 341, 294(b), 323, 506(1) இதச ஆக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்தும் பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு கொண்ட திருமதி சாந்தி 22.06.2020 தேதி 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அனுமந்தன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் சாட்சிகள் வேடியப்பன், வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணன், ராமுமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, பெரியதம்பி, சேகர், காமராஜ், அனுமந்தன், ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 22.06.2020 ம் தேதி 17.30 மணிக்கு எதிரி பரதன் கைதுசெய்து மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் வழக்கின் புலன் விசாணையை முடித்து 23.06.2020 ம் தேதி எதிரிக்கு எதிராக சட்டபிரிவு 341, 294(b), 323, 506(1) இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. இவ்வழக்கில் சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் மேற்கொண்டு வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி மற்ற அனைத்து பட்டியல் சாட்சிகளையும் நீக்கரவு செய்துவிட்டு இந்த வழக்கில் அ.சா.1 வேடியப்பன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, இவ்வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பட்டியல் சாட்சி–11 சாந்தி காவல் உதவி ஆய்வாளர் என்பவரின் கையெழுத்து நன்கு பரிச்சயம் ஆன அ.சா.6 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செண்பகவள்ளி என்பவரை விசாரித்து வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து, அரசுத்தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசுத்தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

18. மேற்கண்டவாறு அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, எதிரி அ.சா.1 வேடியப்பனை தடுத்து நிறுத்தவோ, கெட்டவார்த்தையால் திட்டவோ, அடித்து காயப்படுத்தவோ, கொலைமிரட்டல்விடுக்கவோ இல்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டது பற்றி அ.சா.6 செண்பகவள்ளி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சாட்சியம் அளித்திருந்தாலும், அரசுத்தரப்பில் எதிரியை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்கக்கூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக இல்லாததாலும், எதிரி தான் புகார்தாரரான அ.சா.1 வேடியப்பனை தடுத்து நிறுத்தி, கெட்டவார்த்தையால் திட்டி, அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று நிரூபிக்கப்படாததாலும், இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கினை ஆதரிக்கும் வண்ணம் சாட்சியமளிக்காததாலும், எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

19. முடிவாக எதிரி மீது இதச பிரிவு 341, 294(b), 323, 506(1) –ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு தானாகவே முறிந்துவிடும் என உத்தரவிடப்படுகிறது.

20. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துக்கள் பற்றிய உத்தரவு

இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 10-ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

1) அ.சா.1 - வேடியப்பன்
2) அ.சா.2 -வினாயகம் என்கிற முத்துகிருஷ்ணன்
3) அ.சா.3 -ராமுமூர்த்தி
4) அ.சா.4 -கிருஷ்ணமூர்த்தி
5) அ.சா.5 -பெரியதம்பி
6) அ.சா.6 -செண்பகவள்ளி, சிறப்பு தலைமைக்காவலர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

1) அ.சா.ஆ.1 -புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2) அ.சா.ஆ.2 - சமாதானமனு
3) அ.சா.ஆ.3 - புகார்மனு
4) அ.சா.ஆ.4 - முதல் தகவல் அறிக்கை
5) அ.சா.ஆ.5 - பார்வைமகஜர்
6) அ.சா.ஆ.6 - மாதிரிவரைபடம்

**அரசு தரப்பு சான்றுபொருள் :-இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:-** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணம்:- இல்லை**

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**<u>பின்குறிப்பு:–</u>**

1. எதிரி பிணையில் இருந்து முன்னிலையானார்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**<u>நகல்:</u>**

கிருஷ்ணகிரி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

D SARAVANAN

Digitally signed by D SARAVANAN